செ.வெ.எண்: 05 நாள்: 05.04.2019

**மயிலாடுதுறை பாராளுமன்ற தொகுதிக்குப்பட்ட 6 சட்ட மன்ற தொகுதிகளுக்கான (Control Units, Ballot Unit and VVPAT) இரண்டாவது சுழற்சி முறை (Second Randomization) தேர்தல் பொது பார்வையாளர் திரு.விஜய்குமார்,G.Srkr, இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் முனைவர் சீ.சுரேஷ்குமார் இ.ஆ.ப அவர்கள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது ...**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, 18.04.2019 அன்று நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தல் 2019-ஐ முன்னிட்டு 28. மயிலாடுதுறை பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட 160. சீர்காழி சட்டமன்ற தொகுதி (தனி), 161. மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதி, 162. பூம்புகார் சட்டமன்ற தொகுதி, 170. திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதி (தனி),171. கும்பகோணம் சட்டமன்ற தொகுதி மற்றும் 172. பாபநாசம் சட்டமன்ற தொகுதி ஆகிய ஆறு சட்டமன்ற தொகுதிகளுக்கான Control Units, Ballot Unit and VVPATs இரண்டாவது சுழற்சி முறை (Second Randomization) இன்று (05.4.2019) தேர்தல் பொது பார்வையாளர் திரு.விஜய்குமார்,G.Srkr, இ.ஆ.ப., அவர்கள் , மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் முனைவர் சீ.சுரேஷ்குமார் இ.ஆ.ப அவர்கள் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலா் திருமதி.இந்துமதி, நாகப்பட்டினம் சார் ஆட்சியர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மீ.செல்வகுமார், மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உட்பட அங்கீகரிக்கபபட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**